# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./அ . ந. ஒ / 1–1, 9– 4–2013 நாளிட்டது)**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆ1ம் பிரிவின்(2)ஆம் உட்பிரிவின் (zl)கூறுடன் மற்றும் 92ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவல் நடத்துகை ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தத்தைச் செய்கிறது, அதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 181ஆம் பிரிவின்(3)ஆம் உட்பிரிவின் மூலம் வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளின் 31ஆம் ஒழுங்குமுறைவிதியின், (6)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது ,–

(6) ‘‘ ஆணையத்தின் ஆணைகள் அனைத்தும், செயலாளரின் அல்லது இதுகுறித்து ஆணையத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பத்துடன் ஆணையத்தினால் ஆணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஆணையத்தின் செயல்முறை நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.’’

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**செயலாளர்**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## <u>விளக்கவுரை</u>

2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவல் நடத்துகை ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய உத்தேசிக்கப்பட்ட திருத்தம், மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை அனுப்புவதற்காக ஏழு நாட்கள் காலவரம்பு அளிப்பதன் பொருட்டு மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்ய முற்படுகிறது.

இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தம் செய்யப்பட்ட பின்புள்ள வகைமுறையைக் காட்டும் விவரவுரை

| <u>இருந்து வரும் வகைமுறை</u><br>(1) | <u>உத்தேசிக்கப்பட்ட திருத்தம்</u><br>(2) |
|---|---|
| ஆணையத்தின் ஆணைகள் அனைத்தும் ஆணையத்தின் செயலாளரின் அல்லது ஆணையத்தினால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பத்துடன் ஆணையத்தின் செயல்முறை நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். | ஆணையத்தின் ஆணைகள் அனைத்தும் ஆணையத்தின் செயலாளரின் அல்லது இது குறித்து ஆணையத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பத்துடன் ஆணையத்தினால் ஆணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஆணையத்தின் செயல்முறை நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும். |